அந்தியூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்.

88—(*வினா எண். 991) திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் அரசு மருத்துவமனைக்குப் புதியக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு தொகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள். அந்தப்பகுதியிலே நீண்ட நெடுநாட்களாக ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப் பட்ட அந்த மருத்துவமனை இப்போது ஒரு பாழடைந்த ஒருஇட மாகக் காட்சி அளிப்பதை அங்கே வந்த கடந்தகால அமைச்சர்கள் எல்லாம் அறிவார்கள். அதே மருத்துவமனை சம்பந்தமாக ஏறத் தாழ 100 விண்ணப்பங்கள் வரை மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கும் சம்பந்தப்பட்டத் துறைக்கும் இதுவரை அனுப்பி யிருக்கிறோம். ஆகவே, அருள்கூர்ந்து இந்த மருத்துவமனைக்கு ஒரு கட்டிடத்தை ஏற்படுத்தித் தருவதுடன், அந்தப் பகுதி ஒரு மலைப் பிரதேசமாக இருக்கிற காரணத்தினாலே, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழுகின்ற காரணத் தினாலே ...... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாக கேட்க வேண்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய நலன் கருதி, சுகாதாரத் துறையின் மூலமாக நல்ல பல காரியங்களை அந்த மருத்துவமனைக்கு செய்து உடனடியாகக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கவும் மற்றும் சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்கவும் இந்த அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகச் செய்யப்படாதவைகளெல்லாம் இந்த அரசு செய்யவேண்டுமென்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. 89–90-ஆம் ஆண்டிற்கான

1989 ஏப்ரல் 20]

செயல்திட்டத்திலேயே இது கொண்டு வரப்பட்டது. நிதி நிலையின் காரணமாக இது இந்த ஆண்டு தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது. இவருடைய கருத்துக்களை அடுத்த நிதிநிலை அறிக்கையின்போது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில், குறிப்பாக மலைவாழ் மக்கள் வாழ்கின்ற மலை சூழ்ந்திருக்கின்ற மருத்துவமனைகளைச் சுற்றி காம்பௌண்ட் சுவர்கள் இல்லாமல் இருக்கின்றன. அதைக் கட்டுவதற்கு இந்தச் சர்க்கார் முனையுமா (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வி இதே அவையில் ஏற்கெனவே கேட்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-50)

கோவில்பட்டி மின் கோட்டத்தில் மின் இணைப்பு வழங்குவற்குத் தடை.

89—(*வினா எண். 2060) திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்ளுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி மின் கோட்டத்தைச் சேர்ந்த கிராமங்களுக்கும், பம்பு செட்டுகளுக்கும், வீடுகளுக்கும் புதிதாக மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என தடை விதிக்கபட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தடையை நீக்கி மின் இணைப்பு, தகுதியுள்ளவர்களுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கோவில்பட்டி மின் கோட்டத்தின் பல பிரிவுகளில் உள்ள கிராமங்களில் விவசாய மின்நுகர்வோர் தங்களுடைய மின் கட்டண நிலுவையை 1977ல் ஏற்பட்ட கிளர்ச்சி காலத்திலிருந்தே செலுத்தாமல் இருந்து வருகிறார்கள். எனவே, புது மின் இணைப்பு கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் நிலுவை வசூலில் கணிசமான முறையில் முன்னேற்றம் ஏற்படும் பிரிவுகளில் புதிய மின் இணைப்பினைக் கொடுப்பது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டுக் கொடுக்கப்படும்.